மலான் ஆட்சியை எதிர்த்து சுதேசிகள் இயக்கம்

Phone No 4502 — Regd. No. M. 5458

விலை அரை அணா — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (13—6—50) ❖ வெளியூர் (14—6—50) [இதழ் 277

தூங்கிக் கொண்டிருந்த நீக்ரோக்கள் துடித்தெழுந்துவிட்டனர்

"ஒரு குலத்துக்கொரு நீதி" முறை மண்ணோடு மண்ணாகுமா?

ஜூன் 26-ந் தேதி வேலை நிறுத்தம் செய்யும்படி அறிக்கை

ஜோகன்ஸ்பர்க், ஜூன் 11 — மலானின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்து ஜூன் 26-ந் தேதி எதிர்ப்பு தினமாகக் கொண்டாட வேண்டுமென்று ஆப்ரிக்க மக்கள் பெரும்பான்மையோரைக் கொண்ட ஆப்ரிக்கா தேசிய காங்கிரஸ் உத்திரவு பிறப்பித்துள்ளது.

எதிர்ப்பு தினத்தன்று எந்த வேலையும் செய்யக்கூடாதென்று ஆப்ரிக்க காங்கிரஸ் தலைவர் தோழர் ஜெ. எஸ். மொரோகா அறிவித்துள்ளார்.

தென் ஆப்பிரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சி, தெ. ஆ. இந்தியர் காங்கிரஸ், ஆப்ரிக்க மக்கள் ஸ்தாபனம் ஆகிய கழகங்கள் விட்ட ஒரு கூட்டறிக்கை எதிர்ப்பு தினத்துக்கு ஆதரவு காட்டி வெள்ளையர்களும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆப்பிரிக்க மக்கள் ஸ்தாபனம் தென் ஆப்பிரிக்காவிலேயே மிகப் பெரிய கருப்பு மக்கள் ஸ்தாபனமாகும்.

சென்ற ஏப்ரல் 29-ந் தேதியிலிருந்து மே 2-ந் தேதிவரை நடந்த கிளர்ச்சிகளை ட்ரான்ஸ்வால், ஆரஞ்ச் ப்ரீ ஸ்டேட் ஆகிய இடங்களில் தடை செய்தது ஞாபகமிருக்கலாம், எழுத்துரிமையும் பேச்சுரிமையும் வேண்டுமென்று கம்யூனிஸ்டுகளால் ஆதரிக்கப்பட்ட பல கிளர்ச்சிகள் ஏற்கனவே நடந்துள்ளன.

இனவேற்றுமையே முதல் பிரச்னை

ஆப்பிரிக்க மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் தோழர் மைகேல்ஸ்காட் லண்டனில பேசுகையில்வருங்கால நாகரீகத்துக்கு இனவேறுபாடு நிறவேறுபாடு ஆகியவைகளால் பேராபத்து ஏற்பட்டுள்ளதென்று கூறினார்.

ஆப்பிரிக்க சுதேசி மக்களின் கோரிக்கைகளை ஐ. நா. நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று சலியாமல் முயற்சி செய்த தோழர் மைகேல்ஸ்காட், தென் ஆப்ரிக்காவில் மனித சமூகத்துக்கே நெருக்கடி ஏற்பட்டுள்ளதென்று எச்சரிக்கை செய்தார்.

நிறவேற்றுமை பாராட்டுவதால் ஆப்ரிக்காவில் ஏற்படும் மாறுதல்கள் மிகத் தீவிரமாக இருக்குமென்று அவர் அறிவித்தார்.

தோழர் மைகேல் பேசிய கூட்டத்தில் இனவேற்றுமை பாராட்டக் கூடாதென்றும், தென்மேற்கு ஆப்ரிக்காவைத் தென் ஆப்ரிக்காவுடன் இணைக்கக்கூடாதென்றும் வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

வயிற்றுப் பிழைப்புக்காக வந்து குடியேறிய வெள்ளையர் ஆப்பிரிக்க சுதேசி மக்கள் பல அல்லல்களுக்குள்ளாகி இருப்பதை பலர் எடுத்துப்பேசி வருகிறார்கள்; உலகிலுள்ள பல பத்திரிகைகள் ஓயாமல் எழுதி வந்துள்ளன, ஆனால் ஆப்பிரிக்க சுதேசிகள் இதுவரை சுயேட்சைக்காகச் சுயமுயற்சி என்ன செய்திருக்கிறார்களென்றால், ஒன்றுமில்லையென்றே கூறலாம்.

நீக்ரோக்கள் எந்த நாட்டில் இருந்தாலும் சொந்த நாட்டில் நடக்கும் கொடுமைகளை அடிக்கடி கண்டித்துவர வேண்டுவது அவசியமாகும். அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்கள் அனைவரின் பண்டை நாடு ஆப்ரிக்காதான். அவர்களில் பலர் பேரறிஞர்கள்; பலர் சிறந்த விளையாட்டுக்காரர்கள்; சிலர் குத்துச்சண்டையில் பெயர்போனவர்கள்; பத்திரிக்கைகள் இவர்களைப்பற்றிப் பத்திபத்தியாக எழுதித்தள்ளுகின்றன. இவர்களெல்லோரும் நமக்கென்னவென்றிருக்காமல் நீக்ரோ மக்களின் விடுதலைக்காகப் போராடவேண்டும். இவர்கள் ஆப்ரிக்காவுக்குச் சென்று அங்கு கல்வியறிவுடைய நீக்ரோக்களுடன்கலந்தாலோசித்து விடுதலைப் போராட்டத்தை நடத்த வழி வகுக்கவேண்டும்.

இதுவரை ஏமாளித்தனமாகக் காலங்கழித்து வந்த தென் ஆப்ரிக்க சுதேசிகள் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் நேரடி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வந்ததை முழுமனதோடு வரவேற்கிறோம்.

மூன்று நாச ஆயுதங்கள்

லண்டனில், ஜூ. 12 — மேற்கு வல்லரசுகளிடம் மூன்று நாச ஆயுதங்கள் மூன்று வகைப் படும் என்று இங்கு கிடைத்துள்ள செய்தி கூறுகிறது.

டாங்கி எதிர்ப்பு, விமான எதிர்ப்பு ஆயுதம் ஒன்று, மற்றொன்று 'வேவி' வெருகுண்டுகள் உள்பட அணுகுண்டுகள் அனுப் பீரங்கிகள், கடைசியில் கூறப்பட்ட இருவகை ஆயுதங்கள் இன்னும், உற்பத்திக் கட்டத்தை அடையவில்லை.

இந்த ஆயுதங்கள் எல்லாம் உபயோகத்திற்கு தயாராக வந்துவிட்டால் படையெடுப்புக்குரு சாளமான தருப்புகள் அவசியமில்லாதபோகும் என்று கூறப்படுகிறது.

ரஷியாவை மட்டுமே நம்பியிருக்க வேண்டாம்

—(0)—

செஞ்சீனாவுக்கு எட்வர்ட் சைமாண்ட்ஸ் தரும் அறிவுரை

லண்டன், ஜூன் 12— செஞ்சீனாவின் தேவைகளை எல்லாம் ரஷ்யாவும் அது சொல்படி ஆடும் நாடுகளும் தீர்த்து வைக்கமுடியாது என்றும், ஆகவே சீனா ஆசியமார்க்கெட்டுகளிடம்தான் வர வேண்டியிருக்கும் என்றும் வர்த்தக சஞ்சிகையொன்றில் எட்வர்ட் எஸமாண்ட்ஸ் என்பவர் எழுதியிருக்கிறார். அவர் மேலும் எழுதுவதாவது:—

சீனாவின் இன்றைய முக்கிய தேவை உணவுதான் யுத்தத்திற்கு முன்ஏராளமான அரிசி பர்மாவிலிருந்தும் இந்தோசீனாவிலிருந்தும் சீனாவுக்குகிடைத்துக்கொண்டிருந்தது. இப்பொழுது சீனாவின் ஜனத்தொகை அதிகரித்துவிட்டதால் அரிசிக்கு கிழக்கு நாடுகளை சீனா எதிர்பார்த்தே ஆகவேண்டும். ஆகவே மாஸேதுங் ரஷ்யாவை மட்டும்நம்பி இதர நாடுகளை புறக்கணிக்க முடியாது.

கம்யூனிஸ்டுகளை வெளியேற்ற யோசனை

லண்டன், ஜூன் 12— பிரிட்டிஷ் கூட்டுறவு கட்சி நிர்வாகக் கமிட்டி கட்சியிலிருந்து கம்யூனிஸ்டுகளை வெளியேற்றுவதுபற்றிஆலோசித்து முடிவு செய்யும் எனத் தெரிகிறது.

சிங்கப்பூரில் கட்டாயக் கல்வி

சிங்கப்பூர், ஜூன் 13— சிங்கப்பூர் சர்க்கார் தயாரித்துள்ள 7 ஆண்டு கல்வி அபிவிருத்தி திட்டம் வெற்றிகரமாக அமுல் நடத்தப்பட்டால் சிங்கப்பூரிலுள்ள எல்லா பையன்களுக்கும், பெண்களுக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் அளிக்கப்படும்.

இவ்வாண்டு 18 ஆரம்ப பாடசாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன இம்மாதிரி ஆண்டுதோறும் 18 பள்ளிகள் வீதம் 5 ஆண்டுகள் பள்ளிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன.

—ஞானோ

அங்கேயும் ஜோதிடப் புரட்டு!

ஹாலிவுட் நடிகைகளை ஏமாற்றும் ஒரு நாகரிக எத்தர்

ஹாலிவுட், ஜூன் 12— ஜோஸ்யத்தில் ஹாலிவுட் நடிகைகளுக்கு அபார நம்பிக்கை இருந்து வருவது சமீபத்தில் சேகரிக்கப்பட்ட விபரங்களிலிருந்து தெரியவருகிறது.

சினிமா நடிகைகள் மட்டுமின்றி தயாரிப்பவர்கள், மற்றும் சினிமாத் தொழில் ஈடுபட்டுள்ளவர்கள் இவர்களுக்கும் இப்பைத்யம் இருந்து வருவதாகத் தெரிகிறது.

ஜோஸ்யத்தில் மோகங்கொண்ட சில நடிகைகள் ஒலிவியா டி ஹாவிலண்ட், ஜான்கிரோபோர்ட்கிளாடட் கோல்பார்ட், சுஜூமேயோவொங், பெடிடேவிஸ், மார்லீன்டெட்ரிச் நடிகர் ஜியார்க் பிரண்ட், டைரக்டர் வில்லியம் டிட்டர்லே இவர்களுக்கும் ஜோஸ்யத்தில் மிகவும் நம்பிக்கையாம்.

இவர்களுக்கு ஜோஸ்யம் சொல்பவர் பெயர் கரோல் ரைட்டர் என்பதாம். இவர் ஹாலிவுட்டில் ஒரு டாக்டர் மாதிரி தனி காரியாலயம் ஏற்படுத்திக்கொண்டு 24 மணி நேரம் இந்த 'வியாபாரத்தை' நடத்துகிறாராம்.

ஒவ்வொரு நடிகையும் எந்த வர்ண உடைகளை அணிந்தால் அதிருஷ்டம் ஏற்படும் என்பதையும் இவர் சொல்கிறாராம்.

மேரியா மாண்டீஸ் என்ற நடிகை ஜோஸ்யர் கரோலைக் கேட்காமல் எதுவும் செய்யமாட்டாராம்! ஜோஸ்யர் குறித்ததினத்தில் இவர் முதன் முதலாக தன் கணவனை சந்தித்தாராம். தான் நடிக்கும் படங்களின் ஆரம்ப தினத்தை கரோல் தான் நிர்ணயிக்கவேண்டும் என்று இவர் நிபந்தனை விதிக்கிறார்.

டாங்கிப் படையையும் முறியடிக்கும் ரகசிய ஆயுதம்

அமைதிக்கு வழிகோலும் அன்பர்களின் கண்டுபிடிப்பு!

லண்டன், ஜூன் 12— யுனைடெட் ஸ்டேட்ஸ் ராணுவ அதிகாரி சில நாட்களுக்கு முன் குறிப்பிட்ட இரகசிய ஆயுதம் பற்றிய தகவல்களை 'ரெய்னால்ட்ஸ்' அயல் நாட்டு ஆசிரியர் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிடம் அதிகமான படைகள் கைவசம் இல்லாமலிருந்தாலும், இந்த இரகசிய ஆயுதத்தைக்கொண்டே எதிரிகளை முறியடிக்க முடியுமாம். ரஷ்யர்களிடம் மிகவும் பலமான டாங்கிப் படை இருந்தாலும் இந்த ரகசிய ஆயுதத்தின் மீது அது எதுவும் செய்ய முடியாதாம்.

இந்த ரகசிய ஆயுதத்தில் இரு விசேஷ பீரங்கிகள் பொருத்தப்பட்டிருக்கின்றனவாம், எப்பேர்பட்ட டாங்கிகளையும் துளைத்துவிடக் கூடிய பாஸூகார்ராக்கெட் பீரங்கி இதில் ஒன்றாகும். ஆனால்குறிபார்த்துசுடுவது, இதில் கஷ்டமாம்ஆகவே அதற்காக 'ரிகாயலஸ்'பீரங்கிஒன்றும்சேர்க்கப்பட்டிருக்கிறது.

இவ்விரண்டு பீரங்கிகளின் வேலையைஒன்றுபடுத்தும்இப்புது ஆயுதம் டாங்கிகளுக்கு எமன் போன்றதாம். இந்த ஆயுதம் வைத்துள்ள எந்த காலாட்படையிடமும் எப்பேர்ப்பட்ட டாங்கிப் படையும் எதுவும் செய்யமுடியாதாம்.

புஸ்தகம் பைண்ட் செய்ய இயந்திரங்கள்

லண்டன். ஜூன், 12— ஜான்மூர்ரே என்கிற ஸ்காட்லாந்து வாசி சென்ற யுத்த வருஷங்களாக பார்வை இழந்துவிட்டபோதிலும், புஸ்தகம் பைண்ட் செய்வதற்கான ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இம்மாதிரி பல்வேறு இயந்திரங்களை அவர் ஏற்கனவேயே தயாரித்திருக்கிறார்.

மாலை மணி

சனி 13—6—50 செவ்வாய்க்கிழமை

கல்லுப் பிள்ளையார்!

"நாடு முழுவதிலும் தொழில்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன; தொழிலபிவிருத்திக்கு வேண்டிய மூலதனம் எங்கோ போய் ஒளிந்து கொண்டிருக்கிறது; உற்பத்தி வரவரக் குறைந்து கொண்டே வருகிறது; பொருளாதார அபிவிருத்திக்கான புதிய முயற்சிகள் ஏதோ ஒன்றிரண்டு இங்கும் அங்குமாகக் காணப்படுகின்றன; ஆனால் அவைகளும் முக்கியமானவை அல்ல," இவ்வாறு ஓலமிடுகிறார் தொழில் நிபுணர் சர். விஸ்வேஸ்வரய்யா. தொழிலபிவிருத்தி ஏற்படாததைக் குறித்து அவர் இவ்வாறு முறையிடுவது இது முதல் தடவையல்ல. அரசாங்கமும், தேசத்தலைவர்களும், முதலாளிகளும் ஆகிய இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து தொழில்களைச் சாக அடிக்கும் மதியீனத்தைக் குறித்து அவர் இதற்குமுன் பல தடவைகளிலும் இடித்துக்காட்டியிருக்கிறார். விஸ்வேஸ்வரய்யா மாத்திரமல்ல, நாட்டின் தொழிலபிவிருத்தியில் அக்கறையுள்ள அறிஞர்கள் பலரும், தொழிலபிவிருத்தி ஏற்படாமை காரணமாக நமக்கு வரவிருக்கும், விரைவில் நம்மைநோக்கி வந்து கொண்டிருக்கும் ஆபத்தைப்பற்றி எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த எச்சரிக்கைகளெல்லாம் செவிடன் காதிலூதிய சங்கு போலவேதான். ஏனெனில், இதுவரையிலும் தொழில் துறையில் முக்கியமான அபிவிருத்திகள் எதுவும் ஏற்படவில்லை; சமீபத்தில் ஏற்படக்கூடும் என்று நம்பிக்கை தரத்தகுந்த அறிகுறிகளும் தென்படவில்லை.

இப்பொழுது நாட்டில் நிலவும் பொருளாதாரம் முதலாளித்துவத்தை அடிப்படையாகக்கொண்டது. அதாவது தொழில்கள் வாழ்வதும் மாய்வதும் தனிப்பட்ட முதலாளிகளின் மூலதனம், முயற்சி, திறமை இவைகளைப் பொருத்திருக்கிறது. இவர்களுடைய தெய்வம் பணம்! இவர்கள் கும்பிடச்செல்வது பணக் கோயில்; பணம்தான் இவர்களது உயிர்நிலை. பணம்திரட்டுவது ஒன்றைத்தவிர வேறு எதையும் குறிக்கோளாகக் கொள்ளாத இந்த முதலாளிகள் தொழில்கள் நசித்துப் போவதினால் நஷ்டமல்லவா அடைவார்கள்! நஷ்டம் அடையும் வண்ணம் இவர்கள் நடந்து கொள்வார்களா? என்ற கேள்வி எழக்கூடும். இது மிக நியாயமான கேள்விதான். யானை தன் தலைமீதே மண்ணை அள்ளிக் கொட்டிக்கொள்வது போல், லாபம் வருவதைத் தடுத்துக்கொள்ளும் முதலாளிகளும் உண்டா? இல்லை; பணக் கோயிலில் வழிபடும் இந்த முதலாளிகள் லாபம் பெறுவதில் கண்ணுங் கருத்துமாயுள்ளவர்கள்தான்; கொள்ளை கொள்ளையாக லாபம் அடைந்துதான் வருகிறார்கள். ஆனால் இவர்கள் லாபம் அடைய அனுசரிக்கும் முறைதான் விசித்திரமானது, தேசத் துரோகமானதுங் கூட. ஆயிரம் ரூபாயை லஷ வட்டிக்குக் கொடுத்து, ஆறே மாதத்தில் ஐயாயிரம் ரூபாய் சம்பாதிக்கலாம். அந்த ஆயிரம் ரூபாயைக்கொண்டு இன்று மலிவாக விற்கும் ஒருசரக்கை வாங்கி, அதைப் பதுக்கிவைத்திருந்து, ஆறுமாதம் கழித்து அந்தச்சரக்கு அகப்படாமல் மக்கள் தவிக்கும்பொழுது, அதைப் பதினாயிரத்திற்கோ, ஏன், இருபதினாயிரத்திற்கோ விற்று பல்லாயிரக்கணக்கான ரூபாய் லாபம் அடையலாம். இவ்வாறு சிரமமில்லாமல் கொள்ளை லாபம் அடையும் முறைக்கு 'வட்டி மனப்பான்மை" என்று கூறலாம். இது லாபம் சம்பாதிப்பதற்குச் சுலபமான வழி. ராஜபாட்டையில் நடந்து சென்று, பளிங்கு மாளிகைகள் புகுந்து வைரத்தையும் மாணிக்கத்தையும் வாரிச் செல்லலாம். தற்சமயம் இந்த வழியில்தான் சென்று கொண்டிருக்கிறார்கள் நம்நாட்டில் தொழில் மன்னர்கள் என்று கூறப்படுபவர்கள். இன்னொரு வழியும் இருக்கிறது. ஆனால் அது மேடும், பள்ளமும், முள்ளும் நிறைந்த பாதை. முதலைப்போட்டு ஒரு தொழிலை ஆரம்பித்து, அந்தத் தொழிலை எந்தெந்த வழிகளில் மேம்படச் செய்யலாம் என்பது பற்றி இரவு பகலாகச் சிந்தித்து, இடையூறுகளை லட்சியம் செய்யாமல் சிந்தனையைச் செயலாக மாற்றி, கிடைக்கும் லாபத்தில் பெரும் பகுதியையோ அல்லது முழுவதையுமோ அபிவிருத்தி செய்வதற்காக மறுபடியும் அந்தத் தொழிலிலேயே போட்டு, இவ்வாறு இன்னும் பல முறைகளைக் கையாளுவதின் மூலம் ஆரம்பித்த தொழிலை பிரம்மாண்டமாகப் பெருகச்செய்து, அதன்காரணமாகத் தான் லாபம் அடைவது மட்டுமல்லாமல் நாட்டின் செல்வத்தையும் பெருக்குவதுதான் இரண்டாவது வழி. விஞ்ஞான உதவியைக்கொண்டு முதன் முதலில் புத்தம் புதிய தொழில்கள் ஆரம்பித்த பொழுது, இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளின் முதலாளிகளும் உழைப்பாளர்களும் மேற்குறிப்பிட்ட இரண்டாவது வழியைப் பின்பற்றியதால்தான் இன்று அந்நாடுகளில் தொழில் வளம் பெருகி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. அங்கு ஏழைகள் என்று கூறப்படுகிறவர்கள் கூட பூஞ்சோலைகளுக்கு நடுவில் அமைத்த இல்லங்களில், வயிறார உண்டு களித்து வாழ்க்கை நடத்துகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் கோடிக் கணக்கான லாபம் சம்பாதிக்கும் முதலாளிகள் லாபத்தின் பெரும் பகுதியைத் தொழிலபிவிருத்திக்கான ஆராய்ச்சி செய்வதிலும், உற்பத்தி செய்த பொருளை வெளிநாடுகளில் செய்வதிலும் திறமையாக விற்பதற்காக விளம்பரம் செய்வதிலும், தொழிலாளிகள் உற்சாகத்துடன் வேலை செய்வதற்காகவும் அதிருப்தி அடைந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமலிருப்பதற்காகவும் அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பதிலும் செலவு செய்கிறார்கள். சுய நலத்தைக் கவனித்துக் கொள்வதோடு மாத்திரம் நின்று விடாமல் பொது நலத் தேவைகளையும் பூர்த்தி செய்வதால்தான் மேல் நாட்டு முதலாளிகள் தாங்களும் நிறையச் சம்பாதித்துக் கொண்டு நாட்டு வளத்தையும் பெருக்க உதவி செய்கிறார்கள்.

முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பில் முதலாளிகள் கையாளும் இரண்டு வழிகளைப்பற்றி நாம் மேலே குறிப்பிட்டது, முதலாளித்துவத்தை நாம் ஆதரிக்க விரும்புகிறோம் என்பதற்காகவல்ல; அந்த இரண்டு வழிகளிலும், கேடுகெட்ட, நூற்றுக்கு நூறு தீமை பயக்கக் கூடிய, வட்டி வாங்கும் மார்வாடி மனப்பான்மையிலேயே நம் நாட்டு தொழில் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் ஊறிக் கிடக்கிறார்கள் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான். இதை நாம் மாத்திரம் கூறவில்லை பல ஆண்டுகள் ராஜ போகத்தில் திளைத்தெழுந்தவரும், 'முதலாளிகளின் நண்பர்" என்று கூறப்படுபவருமான சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்களே நம் நாட்டு முதலாளிகளின் இழிவான மனப்பான்மையைப்பற்றி மிகக் கடுமையான பதப்பிரயோகங்கள் செய்திருக்கிறார். அவர் அமெரிக்கா முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இங்கு திரும்பியவுடன் செய்த சொற்பொழிவு ஒன்றில் 'இந்த நாட்டில் தொழிலபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் நம் நாட்டு முதலாளிகள் வட்டிக்குப் பணம் கொடுக்கும் பாங்கர் மனப்பான்மையை விட்டொழித்து. தொழிலபிவிருத்தியில் உண்மையான ஊக்கம் செலுத்தவேண்டும்" என்று இடித்துக்கூறினார் அவர் இவ்வாறு கூறியதை நம் "தேசீயத் தாள்கள்" வேண்டுமென்றே அல்லது மறதியினாலோ அப்பொழுது புறக்கணித்து விட்டன முதலாளிகளும் காதைப் பொத்திக்கொண்டு ஒன்றும் கேட்காதவர்கள் போலிருந்து விட்டார்கள். ஆனால் அதே சர் சி. பி. இராமசாமி அய்யரவர்கள்நாலைந்துதினங்களுக்கு முன் தான் முதலில் கூறியதையே மறுபடியும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார் தொழில்கள் நசித்துப்போகும் வண்ணம் நடந்து கொள்ளும் வட்டி மனப்பான்மை கொண்ட முதலாளிகளைக் கட்டுப்படுத்தி அவர்களது மூலதனமெல்லாம் தொழிலபிவிருத்தியில் ஈடுபடும்படிச் செய்வதற்காக நேரு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதுதான் இப்பொழுது பொது மக்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயம் மூன்று ஆண்டுகளுக்குள் மூன்று நிதி மந்திரிகள் மறிவிட்டார்கள் நேரு அரசாங்கத்தில் ஆனால், கல்லுப்பிள்ளையார் மாதிரி அசையாமல் உட்கார்ந்திருக்கிறார்கள் இந்தியமுதலாளிகள்!

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் தஞ்சைமாவட்ட சுற்றுப்பிரயாணம்

16—6—50	வெள்ளி	— மாயவரம்
17—6—50	சனி	— திருவாரூர்
18—6—50	ஞாயிறு	— நாகை
19—6—50	திங்கள்	— திருத்துறைப்பூண்டி
20—6—50	செவ்வாய்	— மன்னார்குடி
21—6—50	புதன்	— பட்டுக்கோட்டை
22—6—50	வியாழன்	— தஞ்சை
23—6—50	வெள்ளி	— சீர்காழி

சுற்றுப்பிரயாணத்தில் தோழர்கள் பெத்தாம்பாளையம் பி பழனிச்சாமி, ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்

முதலாளித்துவ முறைக்கு நேருஉற்றதோழர் ஆயிற்றே!

—————(0)—————

அமெரிக்கா இதை உணராதது ஏன்?

நியூயார்க், ஜூன் 12—

"இந்தோசீனாவல்ல, இந்தியாதான் ஆசியாவில் கேந்திர நாடு நேருவைப்போன்று அவ்வளவு நல்ல ஒரு தோழரை நாம் பெறமுடியாது" என்று "நியூயார்க் டைம்ஸ்" என்னும் தின இதழில் தோழர் லெவி என்பவர் எழுதுகிறார்.

மேலும் ஆசியாவில் அமெரிக்காவின் திட்டத்தைவிட ரஷியாவின் திட்டமே வெற்றி பெற்றுள்ளதென்று கூறுகிறார்.

"நேரு சர்க்கார் ஒரு முதலாளித்துவ சர்க்கார்; அவர் தன்னை ஒரு சோஷலிஸ்டு என்று கூறிக்கொண்டாலும் முதலாளித்துவ மனப்பான்மையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது; அவரை சிறிது மயக்கினால் நம்முடைய சிறந்த நண்பராக்கிக்கொள்ளலாம், இதுகூடத் தெரியாமல் ஆட்சி நடத்துகிறார்களே அமெரிக்க சர்க்கார்" என்று வருத்தப்படுவதுபோல் கூறுகின்றார், தோழர் லெவி. கூறுகிறவர் ஒரு பொதுவுடமைக்காரராக இருந்தால் நேருவுக்கு முதலாளிப் பட்டம் கட்ட இவ்வாறு அவதூறு செய்கின்றனர் என்று முடிவுசெய்யலாம். ஆனால் தோழர் லெவி ஒரு அரசியல் தெரிந்த அமெரிக்கர்; உண்மையை நாம் பலதடவை எடுத்துக்கூறியதைத்தான் அவர் கூறுகிறார்!

இந்தியதேயிலையையே துருக்கி விரும்புகிறது

கராச்சி, ஜூன் 12—

இந்திய பாகிஸ்தான் தேயிலையை துருக்கி அதிகம் விரும்புவதால் இதை பெறுவது பற்றி பேச்சு வார்த்தை நடத்த துருக்கி ஒரு தூதுகோஷ்டியை அனுப்பியிருக்கிறது. இக்கோஷ்டியினர் இப்பொழுது இறக்கும் பாகிஸ்தானிலுள்ள டாக்காவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

துருக்கி 3000,000 பவுன் மதிப்புள்ள இந்திய பாகிஸ்தான் தேயிலையை வாங்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. இக்கோஷ்டியினர் கல்கத்தாவில் இந்திய அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர்.

அல்பேனியாவில் குழப்பம்

லண்டன், ஜூன் 12—

அல்பேனியாவில் குழப்பம் குமுறி வருவதாக 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையின் டிப்ளமாடிக் நிருபர் கூறுகிறார். ஹோட்ஜாவின் சர்க்காருக்கு நிர்வாக கண்ட்ரோல் இப்போது இல்லை என்றும், 1500 ரஷ்யர்களாலேயே ஹோட்ஜா சர்க்கார் நடைபெறுகிறதென்றும் இவர் கூறுகிறார் அவர் மேலும் கூறுவதாவது:—

இங்கிலாந்திலிருந்துரஷ்யா வெளியேறும் அறிகுறி எதையும்காணோம். ரஷ்யா வாராவாரம் அல்பேனியாவுக்கு சட்டை அனுப்பிக்கொண்டிருக்கிறது.

ஹோட்ஜாவின் மெய்க்காப்பாளர்கள் எல்லாரும் ரஷ்யர்களே. மூன்று சீனியர் ரஷ்ய ராணுவ அதிகாரிகளைக் கேட்காமல் ஹோட்ஜா எதுவும் செய்வதில்லை.

இந்த சர்க்காருக்கு எதிராக 20 000 பேர்கள் பல கோஷ்டிகளாகப் பிரிந்து இருக்கின்றனர்.

எஞ்சினியர்கள் மாநாடு

புதுடில்லி, ஜூன் 8—

புதுடில்லியில் 1949-ல் நடைபெற்ற அகில இந்திய மின்சார சக்தி எஞ்சினியர்கள் மாநாட்டின் நடவடிக்கை விவரங்களும் அறிக்கையும் இப்பொழுது புத்தகமாகவெளியிடப்பட்டுள்ளன. இதன் விலை ஐந்து ரூபாய். புதுடில்லியிலுள்ள சர்க்கார் பிரசுரங்கள் மானேஜரிடம் இவை விலைக்குக் கிடைக்கும் மாநாட்டில் அன்றாட நடவடிக்கை விவரங்களும், மாநாட்டில் விவாதிக்கப்பட்ட தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இப்பிரசுரத்தில் அடங்கியுள்ளன.

மத்யகிழக்கு-பாகிஸ்தான் இணைப்பு சாலை

கராச்சி, ஜூன் 12—

மேற்கு பாகிஸ்தானையும், மத்ய கிழக்கு நாடுகளையும் இணைக்கும் ரஸ்தாவை நவீனமுறையில் செப்பனிட பாகிஸ்தான் திட்டம் போட்டிருக்கிறது. குவெட்டாவில் இந்த ரஸ்தா பல நாடுகளுக்குப் பிரிகிறது. —ரூனோக்

வயிற்றுப் பிழைப்புக்கு திண்டாடும் நமக்கு கோயில் எதற்கு?

—(o)—

சொந்த முறையில் முன்னுக்கு வர முயல வேண்டும்

—(...)—

தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் ராஜ்போஜ் சொற்பொழிவு

சென்னை, ஜூன் 12—

சென்னை ராஜாஜி மண்டபத்தில் தாழ்த்தப்பட்டோர் மாநாடு தோழர் ராஜ்போஜ் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தோழர் வி. பி. எஸ். மணியர் வரவேற்புரைக்குப்பின் மாநாட்டைத் திறந்து வைத்த தோழியர் மீனாம்பாள் சிவராஜ் பேசுகையில், மாநாடுகள் அடிக்கடி கூட்டி தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமையை எடுத்துக் கூற வேண்டுவது அவசியமென்று அறிவித்தார்.

தோழியர் சௌந்த அம்மையார் பெடரேஷன் கொடியை ஏற்றிவைத்தார்.

ராஜ்போஜ் சொற்பொழிவு

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளன பொதுக்காரியதரிசி மாநாட்டுக்குத் தலைமைவகித்து ஆற்றிய சொற்பொழிவாவது:—

தோழர் பி. என். ராஜ்போஜை மகாநாட்டுக்குத் தலைவராக இருக்க வேண்டுமென்று கோரி பல பிரதிநிதிகள் பேசினார்கள்.

தோழர் ராஜ்போஜ் இந்துஸ்தானியில் பேசிய தின் சாரமாவது :— "தாழ்த்தப்பட்டோர் சமூகமுன்னேற்றத்திற்காக நான தமிழ் நாட்டில் எங்கும் சுற்றியிருக்கிறேன். தீண்டாமை இந்த தென்னாட்டில்தான் தீவிரமாயிருக்கிறது. தொடக்கூடாது, ரோட்டில் நடக்கக்கூடாது. கண்ணிலேயே படக்கூடாது என்ற மூன்று விததீண்டாமை இருந்து வருகிறது. கிராமப் பிரதேசங்களில்தான் தீண்டாமை அதிகமிருக்கிறது. அங்கு தாழ்த்தப்பட்டோர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்நிய ஆட்சியிலிருந்த சுக சவுகரியங்கள் கூட இப்பொழுது தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்குக் கிடையாது. தீண்டாமையை ஒழிப்பதற்காக பல ராஜ்யங்களில் தீர்மானம் செய்தபோதிலும் நிலைமையில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. தற்போதுள்ள சுயராஜ்யம் ஏழைகளுக்கல்ல தீண்டாத வகுப்பாருக்கு இல்லை. பணக்காரர்களுக்குத்தான்.

கோவில்களைத் திறந்து விட்டால் போதுமா, வயிற்றுப் பாட்டுக்குத் திண்டாடும் நமக்கு கோவில் எதற்கு? ஹரிஜன் பிரதிநிதிகளாக காங்கிரசில் இருப்பவர்களுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பார் பெடரேஷன் அங்கத்தினர்களுக்கு இருக்கும் பொதுஜன ஆதரவு கிடையாது, பெடரேஷனைக் கலைக்க காங்கிரஸ் முயற்சிக்கிறது. தற்போது தாழ்த்தப்பட்டோர் சமூகத்தாருக்குச் சில சலுகைகள் கிடைக்கின்றன வென்றால் அவைகளுக்கு டாக்டர் அம்பேத்காரின் முயற்சிதான் காரணமாகும்.

டாக்டர் அம்பேத்கார் கஷ்டப்பட்டு சம்பாதித்த சலுகைகளை எல்லாம் காங்கிரசில் சேர்ந்திருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அனுபவிக்கின்றனர், அந்த சலுகைகள் கிடைத்தது, ஹரிஜன சேவா சங்கத்தாலல்ல டிப்ரஸ்ட் கிளாஸ் லீக்காலல்ல. ஆனால் டாக்டர் அம்பேத்காரின் தலைமையிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பார் பெடரேஷனின் முயற்சியால்தான் என்பது உண்மை.

நான் யாரையும் நிந்திக்கவில்லை; ஆனால் பதவிக்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு ஜாதியபிமானம் வேண்டுமென்றுதான் கூறுகிறேன். உங்களுடைய பதவியில் உங்கள் வகுப்பாருக்கு ஏதாவது நன்மைசெய்யமுடியவில்லை என்றால் என் பதவியிலிருக்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன்.

"எப்படியும் இன்னும் சிறிது காலத்தில் அரசியல் மாறுதல் ஏற்படத்தான் போகிறது. நமக்குள் பிளவுகள் ஏற்படாமல் பார்த்து நாம் ஒற்றுமையுடனிருந்து அந்த நாளை எதிர்பார்க்க வேண்டும் ராஜாங்க பதவிகள் பணியாக்களுக்கும், பிராமணர்களுக்கும் ஏகபோக உரிமையல்ல. நாங்களும் இந்நாட்டு மக்கள், எங்களுக்கும் பங்கு வேண்டுமென்றும்தான் கேட்கிறோம் சென்னை ராஜ்யத்தில் மட்டுந்தான் ஒரு பிராமண மந்திரி இருக்கிறார். மற்ற ராஜ்யங்களில் பிராமண மந்திரிகள் தான் அதிகம். அதனால்தான் பிராமணரான தோழர் சங்கரராவ் தேவ் இந்த மந்திரி சபை சரியாயில்லை என்று கூறினர் இதை எல்லாம் பார்த்துத்தான் ஹிந்து மதத்தால் நமக்கு நன்மை ஏற்படப்போவதில்லை என்று எண்ணி புத்தமதத்தை அனுஷ்டிக்க டாக்டர் அம்பேத்கார் பேசுகிறார் புத்தமதம் ஒரு சிறந்த மதம். அதில் ஜாதிவித்தியாசம் கிடையாது

டாக்டர் அம்பேத்காரின் தொண்டர்கள் அவரைப் பின்பற்றி புத்தமதத்தைப் பின்பற்றுவார்களானல் வரப்போகும் தேர்தல்களில் அவர்களுக்கு இடங்கொடுக்கப் போவதில்லை என்று சிலர் கூறுகிறார்கள். இந்த மிரட்டல்களுக்கு அஞ்ச நாங்கள் குழந்தைகளல்ல. யார் என்ன சொன்னாலும் நாங்கள் எங்கள் பிரசார வேலையைச் செய்யத்தான் போகிறோம். தற்போது தென் நாட்டிலிருக்கும் நம் வகுப்பினர் சுமார் 84 லட்சத்தவர்களும் ஒன்று கூடுங்கள். பெடரேஷனுக்கு அங்கத்தினர்களைச் சேருங்கள் சங்கத்தைப்பலப்படுத்துங்கள் நமது இந்த போராட்டத்தில் நாம் நன்கு உழைத்து அரசியலில் நமது ஸ்தானத்தை யடையவேண்டும்.

வரப்போகும் தேர்தலில் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் ஏதாவது ஒரு கட்சியுடன் சேர்ந்து ஒப்பந்தம் செய்துகொண்டு வேலைசெய்யப் போகிறது. அது எந்த கட்சி என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை காங்கிரஸ் தலைவர்களும், சோஷலிஸ்டு தலைவர்களும் தங்களுக்கு பெடரேஷனின் ஆதரவு வேண்டுமென்று டாக்டர் அம்பேத்காரைக் கேட்டிருக்கிறார்கள் ஆனால் அவர் பதில்கூறவில்லை. இதில் ஒரு முடிவு ஏற்படும் வரை நீங்கள் தனியாகவில் எந்த கட்சியிலும் சேர்ந்துவிட லாகாதென்று உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலுக்கு முன் டாக்டர் அம்பேத்கார் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணஞ் செய்யத் திட்டமிட்டிருக்கிறார். அப்பொழுது அவர் ஒவ்வொரு ஜில்லாவிலும் தமது அபிப்பிராயத்தைத்தெரிவிப்பார். நான் இப்பொழுது காங்கிரஸாருக்குச் சொல்வதெல்லாம் நேர்மையுடன் நடங்கள் ஏழைகளுக்கு நன்மை செய்யுங்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எல்லா உதவிகளும் புரியுங்கள் என்பதே."

இத்துடன் மாநாட்டு காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன

அண்டார்டிக் நாடுகள் மீது ரஷியா கண்ணோட்டம்

லண்டன், ஜூன் 12—

அண்டார்டிக் பிரதேசங்களில் சில தங்கள் பிரதேசத்துடன் சேர வேண்டும் என்ற ரஷிய கோரிக்கையை வாஷிங்டனிலுள்ள ரஷிய பிரதிநிதி யு. எஸ். சர்க்காரிடம் அளித்திருப்பதாகத்தெரியவருகிறது. கேப்ஹார்னுக்கு தெற்கிலுள்ள பிரதேசத்தை ரஷியா கேட்டிருப்பதாகத்தெரிகிறது.

இது மிகவும் முக்கியமான கேந்திரஸ்தலம். பனாமா கால்வாய் அடைபட்டால் அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக்கிற்கு உள்ள வழி இதுதான்.

இதுவரை அண்டார்டிகாவைப்பெற பிரிட்டன், பிரான்ஸ், நார்வே, ஆஸ்திரேலியா, சிலி. அர்ஜெண்டைனா ஸ்வீடன், நியூஜிலாந்து இவ்வளவு நாடுகள் கோரிக்கையை சமர்ப்பித்திருக்கின்றன ஆனால் இதுவரை அமெரிக்கா எவ்வித உரிமையையும் கொண்டாடவில்லை எந்த நாட்டின் கோரிக்கையையும் அங்கீகரிக்கவில்லை.

பர்மா கொள்கைக்கு ஒத்ததாகவே எங்கள் கருத்துள்ளது

—(o)—

நிலம் தேசிய மயமாக்கும் பேச்சு பற்றி பக்தவத்சலம்

ரங்கூன், ஜூன் 11—

"பர்மாவில் நிலம் தேசியமயமாக்குவது சம்பந்தமாக இந்தியத் தூதுக்குழு வெளியிட்டுள்ள எண்ணம் பர்மா சர்க்கார் கொள்கைக்கு ஒத்ததாகவே உள்ளது" என்று இந்தியத் தூதுக்குழுவின் ஒருவரான சென்னை சர்க்கார் மந்திரி தோழர் எம், பக்தவத்சலம் அறிவித்தார்.

இந்திய தூதுக்குழு பர்மா சர்க்கார் தொல்லைகளையும் சீர்தூக்கிப்பார்த்து நிலத்தைத் தேசியமயமாக்கும் கொள்கையை ஆதரவுக்கண்கொண்டு நோக்கிற்றென்று அறிவித்தார்.

இன வேறுபாடு காட்டாமல் நிலத்தை சர்க்கார் பங்கிட்டுக்கொடுக்க முன்வந்துள்ளது உண்மையிலேயே பாராட்டகூடியதொன்றாகுமென்று அவர் கூறினார். பர்மா சர்க்காரின் நட்புறவை தோழர் பக்தவத்சலம் பாராட்டினார். தோழர் பக்தவத்சல இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

இலங்கை தி. மு. கழகம்

கொழும்பு நகரக்கிளை

மேற்படி கிளைகழகத்தின் விசேஷ பொதுக்கூட்டம் 21-5-50 தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கொழும்பு ஆட்டுப்பட்டித் தெரு வெள்ளை உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில். தோழர் ந. ஆறுமுகம் (இலங்கை தி. மு. கழக நிர்வாகக்குழு செயலாளர்) தலைமையின் கீழ் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் கழக விளம்பர உறுப்பினர் தோழர் மா. கோ தேவராசன், கழகம் சுமார் மூன்றுமாதகாலமாக வேலை செய்யாமல் ஸ்தம்பித்திருந்தமையை குறிப்பிட்டு பேசி கூட்டத்திற்கு வந்துள்ளவர்களை வரவேற்று தோழர் ஆறுமுகம் அவர்களைத் தலைமைதாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

1950—1951 ஆண்டுக்கு கீழ்கண்டவர்களை ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டது எஸ். கே. மாணிக்கம் தலைவர், செயலாளர் ஏ. எம். அர்ஜுனன் துணைச் செயலாளர் விளம்பர உறுப்பினர், மா. கோ. தேவராசன் பொருள் உறுப்பினர் ஆ. அழகிறைவன் எஸ். கே. சுந்தரராசன், ஏ. எம். அந்தோணிமுத்து, கே. எம். மாணிக்கம் வி. எஸ். மன்னர் மன்னன், எஸ். கே. ராசரத்தினம் எஸ். வி. பாலகணபதி ஆகியோர்களை நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பட்டது பின்னர் தலைவர் முடிவுரையும் செயலாளர் நன்றி நவில சுமார் 7-45 மணியளவில் இனிது முடிவடைந்தது என இலங்கை தி. மு. கழக கொழும்பு நகரக்கிளை விளம்பர உறுப்பினர் தோழர் மா. கோ. தேவராசன் அறிவிக்கிறார்.

அரிசி உற்பத்தியை அதிகரிக்கும்

டிரினிடாடிஸ் முயற்சி

டிரினிடாட், ஜூன் 12—

அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் எல்லாம் இங்கு செய்யப்பட்டுவருகின்றன.

1938 முதல் 1948 வரை டிரினிடாடிஸ் அரிசி உற்பத்தியை இரட்டிப்பாக்கியிருக்கிறது. இங்கு 20,000 ஏக்கர் பயிரிடப்படுகிறது.

விவசாய இலாகாவில் அரிசி உற்பத்தி விசேஷ அதிகாரி ஒருவர் சீக்கிரம் நியமிக்கப்படவிருக்கிறது. —ருனோக்

ரஷ்யா முட்டுக்கட்டைப் போடுகிறதாம்!

பெல்கிரேட், ஜூன் 12—

யூகோ தயாரித்துள்ள 5 வருஷத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறையில் செய்ய ரஷ்யா முட்டுக்கட்டைபோட்டு வருவதாகக் கூறப்படுகிறது. யூகோ மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளுடன் பேசி இத்திட்டம் வெற்றி பெறுமாறு நடக்க டான்யூப் நதியில் ரஷ்யா ஒத்திகைகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சானே இயற்கை எய்தினர்

பம்பாய், ஜூன் 11—

மாராட்டிய சோஷலிஸ்டுத் தலைவர் தோழர் பி. எஸ். சானி இன்று ஆஸ்பத்திரியில் இயற்கையெய்தினர்.

ஜூன் 9-ந் தேதி இவர் மூன்று மயக்கமடைந்து முந்த காரணத்தால் இவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இவருடைய வயது 45 ஆகும்.

---

90 வகை கடல்பாசிகள்

மண்டபம் அருகே உள்ளன

புதுடில்லி, ஜூன் 11—

தென் இந்தியாவில் மண்டபம் பகுதியில் கடல் ஓரத்தில் கடல்பாசிகள் விஷயமாக விரிவான பரிசோதனை செய்யப்பட்டது. சுமார் 90 வகை கடல்பாசிகள் அப்பகுதியில் இருக்கின்றன. இவைகளில் சில வகைகள் மனிதர்களுக்கு ஆகாரமாகக் கூடிய உணவு சத்துக்கள் உள்ளனவாம். மற்றும் சில கால்நடைகள் உட்கொள்ளத்தக்கவை. மீதமுள்ளவைகள் கைத்தொழிலுக்குப் பயன்படுமாம்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

14-6-50

கோட்டை (கோவை) :—சி. பி. சிற்றரசு.

15-6-50

மேட்டுப்பாளையம் (நீலகிரி) :—சி. பி. சிற்றரசு

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. கே. நீலமேகம் அவர்களின் அறிக்கை

*

அண்ணா அவர்களின் தஞ்சை மாவட்ட சுற்றுப் பிரயாண நிகழ்ச்சியில் கண்டிருக்கும் ஊர்களில் கூட்டத்தை நடத்தும் தோழர்கள் முழு விவரம் தெரிந்துகொள்வது அவசியமானுல், உடனே என்னை நேரில்வந்து பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்

சர்வதேச எஞ்சினியரிங் கண்காட்சி

புதுடில்லி, ஜூன் 8ம்

இந்தியாவில் 1951 ஜனவரியில் நடைபெறவிருக்கும் சர்வதேச எஞ்சினியரிங் கண்காட்சி பற்றிய விளக்கப் பிரசுரம் ஒன்றை மத்திய நீர்ப்பாசன போர்டு இப்பொழுது வெளியிட்டிருக்கிறது. காட்சிப் பொருள்களை அனுப்பி வைக்கும்படி சுமார் 40 நாடுகளுக்கும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள ஆராய்ச்சிக் கழகங்களுக்கும், தொழில் ஸ்தாபனங்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தியாவின் பல்வேறு மாகாண சர்க்கார்களும் இந்தக் கண்காட்சியில் பங்கெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சி நடைபெறும் சமயத்தில் நான்கு சர்வதேச ஸ்தாபனங்களின் மாநாடுகளும் புதுடில்லியில் நடைபெறவிருக்கின்றன. உலக மின்சார சக்தி மாநாடு, பெரிய அணைகள் பற்றிய சர்வதேசக் கமிஷன், நீர்ப்பாசனம், கால்வாய்கள் பற்றிய சர்வதேசக் கமிஷன், சர்வதேச ஜலசக்தி அமைப்புகள் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவையே இந்த ஸ்தாபனங்களாகும். மேற்கூறிய சர்வதேச ஸ்தாபனங்களின் பரிசிலனைக்குட்பட்ட துறைகளில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான அபிவிருத்திகளைப் பிரதயட்சமாக விளக்கிக் காட்டுவதே இந்தக் கண்காட்சியின் நோக்கமாகும்.

இந்தக் கண்காட்சி, புதுடில்லியில் 1950 மார்ச்-ஏப்ரலில் உற்பத்தியாளர்களின் தொழில் கண்காட்சி நடத்தப்பட்ட இடத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சுமார் ஒரு மாதத்துக்கு இந்தக் காட்சி நடைபெறக்கூடும். காட்சிக்கு அனுப்பப்படும் பொருள்களுக்கு இறக்குமதி வரி, உள்ளூர் தீர்வை ஆகியவற்றினின்றும் விதிவிலக்கு அளிக்கவும் நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய சிமிட்டி முதலிய பொருள்களை சப்ளை செய்யவும் மத்திய நீர்ப்பாசன போர்டு ஏற்பாடு செய்து வருகிறது.

★ நாட்டு நடப்பு ★

சீர்திருத்த திருமணம்

உடுமலை ஜூன் 7—

7—6—50 புதன்கிழமை-காலை 9 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழரும், வெளிநாடுகளுடன் சிறை சென்றவருமான உடுமலை தோழர் ர. தங்கவேலுக்கும், கா. இராசாமணிக்கும் பழனி 'நடராச நிலையத்தில்' புரோகித மற்ற திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

அப்போது, நண்பர்களும் உறவினர்களும் மணமக்களுக்கு வாழ்த்திதழ்கள் வாசித்துக் கொடுத்ததல்லாமல், அன்பளிப்புகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. திருமணத்திற்கு வந்த புரோகிதர் திருப்பி அனுப்பப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சொற்பயிற்சிக் கழகம்

செங்கம் ஊர், ஜூலை 9—

8—6—50 அன்று புதுமைப் படிப்பகக் கட்டிடத்தில் "சொற்பயிற்சிக் கழகம்" ஒன்று நிறுவப்பட்டது. கூட்டத்திற்குச் சுமார் 60 பேர் வருகை தந்திருந்தனர். தோழர் கே. திருராமச்சந்திரன் பி. எஸ்சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

"சொற்பயிற்சிக் கழகம் ஏன்?" எனும் பொருள்குறித்து தோழர்கள் நீலம், பெருமாள், சுவாமிநாதன் மாரியப்பன், சதாசிவம், இளமாறி, வெற்றிக்கரசு, காளிசாமி, இ. கு. சோமன் ஆகியோர்கள் மிகவும் உணர்ச்சியோடு சொற்பொழிவாற்றினர்கள். கூட்டத்திற்கு சுமார் 75 வயதுள்ள ஒரு வெருகிழவரும் வருகைதந்து, காதுகேட்காத நிலையிலும் பேச்சாளர்களின் அருகில் அமர்ந்த ஆர்வத்தோடு பேச்சுகளைக் கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதும், தி. மு. க.-வினரின் கருத்துக்கள் எந்த அளவுக்கு பொதுமக்கள் மனதைக் கவர்கின்றன என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுமாகும்.

கூட்டம் மூன்று மணி நேரம் சிறப்பாக நடந்து செயலாளர் நன்றி கூற இரவு 8-மணிக்கு இனிது முடிந்தது.

கருப்புக்கட்டி உற்பத்தி தொழிலாளர் சங்கம்

சன்னிராசபுரம் ஜூன் 5—

ஞாயிற்றுக்கிழமை சன்னிராசபுரம் குமரன் மைதானத்தில் சன்னிராசபுரம் கருப்புக்கட்டி உற்பத்தி தொழிலாளர் சங்கத்தின் சார்பாக ஜில்லா போர்டு அங்கத்தினர் தோழர் சேதுராமன் செட்டியார் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் சாத்தூர் குருப் ஹெட் மேனின் லஞ்ச ஊழல் பற்றியும் உணவுப் பங்கீட்டை சரியான முறையில் விநியோகம் செய்யாதது குறித்தும் இராமநாதபுரம் ஜில்லா கருப்புக்கட்டி உற்பத்தி தொழிலாளர் சங்கத் தலைவர் டி. தர்மக்கண், காரியதரிசி வி. ஜேம்ஸ் அய்யாத்துரை சுப்ரமணியம் வி. சண்முகசுந்தரம் சுந்தரவேல் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

டை கிராம அதிகாரியின் மேல் நடவடிக்கை எடுக்க 10—5—50ல் டை சங்கத்தின் சார்பாக நடந்த பொதுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் இராமநாதபுரம் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அவர்களை ஞாயிற்றுக் கிழமையில் சந்தித்து குறைகளை தெரிவித்தும் இதுவரை பொது ஜன விசாரணை நடத்தாது காலம் கடத்திவருவது பற்றி மிகவும் வருத்தத்துடன் இந்நிலைமை நீடித்தால் மக்கள் பட்டினி சாவிற்கு பலியாக நேரிடும் என்பதையும் சர்க்காருக்குத் தெரிவிக்கிறது.

இக்கிராம அதிகாரியின் அநீதிகளை இராமநாதபுரம்ஜில்லா கலெக்டர் அவர்களிடம் நேரில் தெரிவிப்பதற்காக ஜில்லா உணவுக் கமிட்டி அங்கத்தினர் தோழர் சேதுராமன் செட்டியார் அவர்கள் தலைமையில் ஓர் தூதுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மாபெரும் மருத்துவ விடுதி



அமெரிக்காவில், பதிவு செய்யப்பட்ட மருத்துவ விடுதிகளின் எண்ணிக்கை 6335. அவற்றுள் மிகப் பெரிய வெஸ்லி மெமோரியல் ஆஸ்பத்திரியே படத்தில் காணப்படுவது. இது சிக்காக்கோ நகரில் உள்ளது. வார்டுகளுக்கும், அறைகளுக்கும் நல்ல வெளிச்சம் கிடைக்கும் முறையிலே கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் 20 அடுக்கு மாடிகளைக்கொண்டது.

தாராபுரம் தொகுதியில்
30—6—50 ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சை பெட்டியில்
தயவுசெய்து ஓட்போடவும்

பாரதிதாசன் மன்றம் ஆரம்ப விழா!

மதுரை, ஜூன் 8—

இந்நகர் மேலமாசி வீதியில் 108 நெம்பர் இல்லத்தில் பாரதிதாசன் மன்றம் அமைப்புக் கூட்டம் நேற்று மாலை 7-மணிக்கு தோழர் ரா. வேங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் மன்றத்தின் நோக்கங்கள் வாசிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது. ஜூன் 25-ம் தேதி மன்றத்தின் துவக்க விழா நடத்துவதென்றும், விழாவிற்கு அறிஞர்கள் கா. அப்பாத்துரைப் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், கோவை ஓ. அய்யாமுத்து ஆகியோர்களை அழைப்பதென்றும், ஜூன் 26, 27, 28-ம் தேதிகளில் பாரதிதாசனை அழைத்து, மதுரையில் திருக்குறள் வகுப்பு நடத்துவதென்றும், பாரதிதாசன் மணிவிழா அமைப்பு பூர்வாங்கக் கூட்டத்தை மதுரையில் ஜூன் 25-ம் தேதி கூட்டுவதென்றும், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பின்னர் மன்றத்திற்குக் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் ஆர். தனுஷ்கோடி ராஜா தலைவர், பு. ரா. வெங்கடாசலம் உபதலைவர், எஸ். ராஜு பொதுச் செயலாளர், "ரவி" சோ. சுவாமிநாதன் துணைச் செயலாளர்கள், சிவ. காமாட்சிநாதன் நிதி காப்பாளர். மற்றும் பலர் செயற்குழு உறுப்பினர்கள். (ந-ரி)

இலுப்பையூர் வாலிபர் நாடார் சங்கம் நிர்வாகிகள் தேர்தல்

மதுரை, ஜூன் 9—

இந்நகர் இலுப்பையூர் வாலிபர் நாடார் சங்கத்தின் 5-வது ஆண்டு அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் க. கு. முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர் மீ. ரத்தினசாமி நாடார் நிர்வகித்த விஷயமாக இனி நடக்க வேண்டியவைகளையும், இதுவரை நடந்தவற்றையும் தெளிவாக விளக்கமாகபேசினார்.

பின்னர் கீழ்க்கண்டவர்கள் நடப்பு ஆண்டிற்கு நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் ஞ. சண்முகம் தலைவர், சி. சிவமுருகன் உபதலைவர், ஞ. முனியாண்டி காரியதரிசி, கா. ரத்தினசாமி உபகாரியதரிசி, வ. பெருமாள் நாடார் பொக்கிஷதார்.

இறக்கைகளுள்ள பூனை!

மாட்ரிட், ஜூன், 12—

இறக்கைகள் உள்ள ஒரு பூனைக்கு 15000 பவுன் வரை தருவதாக சொன்னபோதிலும் அதை விற்கமுடியாது என்று அதை வளர்க்கும் ஒரு 'போர்ட்டர்' மறுத்துவிட்டான். இப்பூனைக்கு இறக்கைகள் மட்டும் இருக்கிறதே ஒழிய அதனால் பறக்க முடியவில்லை.

இப்பூனையை கண்காட்சியில் வைக்க கொடுக்கும்படியும் தினம் 10 பவுன் தருவதாகவும் அந்த போர்ட்டரை கேட்டதற்கு அதையும், தான் அன்பாக வளர்த்த பூனையை கொடுத்துவிட மறுத்து விட்டான். —ரூனேப்

தேவை

புதியதாய் சென்னையில் கூடிய சீக்கிரம் ஆரம்பமாகும் கம்பெனிக்கு திறமை வாய்ந்த குமாஸ்தாக்கள், ஸ்டோர் கீப்பர்கள், பேக்கர்கள், சேல்ஸ்மென்கள், பியூன்கள் எல்லா ஜில்லாக்களுக்கும் தேவை. ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கு 4 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

B. P. கோபால் & Co., சென்னை-5.

திருவள்ளுவர் கழகத்தில் அம்பேத்கார்

மதுரை, ஜூன் 8—

மத்திய சர்க்கார் சட்ட மந்திரி தோழர் பி ஆர். அம்பேத்கார் அவர்கள்தம் மனைவியுடன் இன்றுகாலை 9-மணிக்கு வடக்காடி வீதி திருவள்ளுவர் கழகத்திற்கு வருகை செய்தனர் மீனாக்ஷி அம்மைகோவில் டிரஸ்டி தோழர் நாகசுந்தரம் பிள்ளையவர்கள் தோழர் அம்பேத்காரை வரவேற்றார். கழக ஆசிரியர் திருக்குறட் களஞ்சியம் தோழர் தி. பு. சுப்பிரமணியதாசு அவர்களும் உடன் இருந்தனர். திருக்குறளையும் திருவள்ளுவர் திருவுருவப்படத்தையும் கண்டு வியந்து முக்கால் மணிநேரம் தங்கியிருந்தனர்.

துள்ளிவிளையாடும் கிழவர்கள்

பான், ஜூன் 12—

100 வயது கிழவர்கள் அல்லது அந்த வயதை எட்டிப்பார்க்கும் கிழவர்கள் எல்லாரும் சேர்ந்து ஹெர்மான் ஞாபகச்சின்னத்தை பார்வையிட சென்றனர். அங்கு அவர்களுக்கு ஏற்பட்ட குஷியில் நடனமாட ஆரம்பித்துவிட்டார்களாம்!

விமான ஓட்டிகளுக்கு ஒரு நிபந்தனை

லண்டன், ஜூன். 12—

'ஆண்டி ஹிஸ்டமைன்' என்கிற மருந்து உட்கொள்பவர்கள் விமானத்தை சிகிச்சை முடியும் வரை ஓட்டக்கூடாது என்று விமான மந்திரி காரியாலயம் எச்சரித்திருக்கிறது. இம்மருந்தினால் மூளை குழப்பம், பார்வை மங்குதல், மயக்கம் வருவது முதலியன ஏற்படுமாம்.

ஜப்பானில் கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்படலாம்

லண்டன், ஜூன் 12—

கம்யூனிஸ்டு கட்சியை தடை செய்ய வேண்டும் என்று ஜப்பானிய சர்க்கார் விரும்புவது ஜப்பானிய சமாதான உடன்படிக்கை கையெழுத்தாவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்வதற்காகவேதான் என்று மேனாட்டு விமர்சகர்கள் கூறுகின்றனர்.

—ரூனேப்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.